சென்னை நகர மக்களின் குடிநீர்த் தேவையையும் பூர்த்தி செய்ய இந்த அரசு அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ளும் எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிவிப்புகள்

(அ) பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழு ஆகியவற்றிற்கு உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. பின்வரும் பல்கலைக்கழகங்களின் ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு, கல்விக் குழு மற்றும் நிர்வாகக் குழுக்களுக்கு அலுவல் சார்பற்ற உறுப்பினர்களாகப் பணிபுரிய அவற்றின் நேர் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களுக்குச் சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்குமாறு அப்பல்கலைக்கழகங்களின் பதிவாளரிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

பல்கலைக்கழகம்	உறுப்பினர்களின் எண்ணிக்கை
அழகப்பா பல்கலைக்கழகம்	1
அண்ணா பல்கலைக்கழகம்	1
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்	3
பாரதியார் பல்கலைக்கழகம்	2
பாரதிதாசன் பல்கலைக்கழகம்	2
தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம்	2
சென்னைப் பல்கலைக்கழகம்	6
மதுரை காமராஜ் பல்கலைக்கழகம்	4
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்	2

2006 ஆகஸ்ட் 7] [பேரவைத் தலைவர்]

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்	1
தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்	1
தமிழ்ப் பல்கலைக்கழகம்	2
பெரியார் பல்கலைக்கழகம்	2
திருவள்ளுவர் பல்கலைக்கழகம்	2

மேற்குறிப்பிடப்பெற்ற பல்கலைக்கழகங்களில் அண்ணாமலை பல்கலைக்கழகத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று உறுப்பினர்களின் பதவிக் காலம் 5–12–2007 வரை ஆகும். மற்ற பல்கலைக்கழகங்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்களின் பதவிக் காலம் தேர்ந்தெடுக்கப்படும் நாளிலிருந்து மூன்று ஆண்டுகளாகும்.

தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர், ஏதாவது ஒரு காரணத்திற்காகப் பேரவை உறுப்பினர் பதவியை இழக்க நேரிட்டால் அந்த நாளோடு அவருடைய உறுப்பினர் பதவியும் முடிவடையும்.

தேர்ந்தெடுக்கப்பெற விழையும் வேட்பாளர்கள் தங்களின் வேட்பு மனுக்களை 9–8–2006 (புதன்கிழமை) அன்று நண்பகல் 12–00 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்பு மனு படிவங்கள் வேண்டுவோர் பேரவைச் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

வேட்பு மனுக்கள் 9–8–2006 அன்று பிற்பகல் 4–00 மணிக்குப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 10–8–2006 அன்று பிற்பகல் 3–00 மணிக்குள் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறலாம்.

வேட்பு மனுக்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், பல்கலைக்கழகங்களின் அமைப்புகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெறும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.